Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

MONDAY, JUNE 03, 2024

திங்கட்கிழமை ஜூன் 03, 2024 | ஒளி: 09 கதிர்: 264 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE





## இயற்கை அனர்த்தங்களில் சிக்குண்டு

# 9 பேர் மரணம்

கடந்த சில வாரங்களாக நாடளாவிய ரீதியில், 20 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்குண்டு 15 பேர் மரணமடைந்துள்ளனர். சனி(01), ஞாயிறு (02) கிழமைகளில் மட்டும் ஒன்பது பேர் மரணித்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அந்த நிலையம், ஞாயிற்றுக்கிழமை (02) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் பிரகாரம், 3,717 குடும்பங்களைச் சேர்ந்த 11,864 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் 20 மாவட்டங்களில் கடுங்காற்று, மரங்கள் முறிந்துவிழுதல், மின்னல்தாக்கம், வெள்ளம் உள்ளிட்ட இயற்றை அனர்த்தங்களால், 17 வீடுகள் முழுமையாகவும், 3,304 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அந்த நிலையத்தின் புள்ளிவிபர தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 641 தற்காலிக மத்திய நிலையங்களில் 2,611 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளன.

அவிசாவளை, சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் 11 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்களில் மக்கள் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அவிசாவளை புவக்பிட்டிய தெற்கு கிராம உத்தியோகத்தர் களத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும் மேலும் ஒருவர் மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (02) காலை 7 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 427.5 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சி எஹலியகொடவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், தெய்யந்தர, பல்லேவெல பிரதேசத்தில் வீடொன்றின் மீது சனிக்கிழமை (01) இரவு மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 20 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. மேலும், ஒருவர் காயமடைந்து எல்லேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### ஹோட்டலில் சிக்கிய 85 பேர் மீட்பு

களுத்துறை- ஹொரண ஸ்வக்வத்த பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில் சிக்கிக்கொண்ட பல்வேறு வயதுடைய சுமார் 85 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். மாவக் ஓயா நிரம்பி வழிவதால், ஹோட்டலில் சிக்கி எதிர்பாராத பிரச்சினைக்கு அவர்கள் முகம் கொடுத்துள்ளனர்.

### மின்சாரம் தடைப்படும்

மழையுடனான சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் மற்றும் மண்சரிவை அடுத்து, நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

பாதுகாப்பு காரணங்களை முன்னிலைப்படுத்தி மின்சாரம் தடைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது. அத்துடன், பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது

### கொழும்பு – கண்டி வீதியில் பாதிப்பு

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் வரக்காபொல நகருக்கு அருகில் மரம் முறிந்து வீழ்ந்ததையடுத்து அந்த வீதியின் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

தொடர்ச்சி P2




## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாக சகல பாடசாலைகளும் திங்கட்கிழமை (03) மூடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கனமழையுடன் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடியதாலும் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால், போக்குவரத்து நடவடிக்கைகள் தடைபட்டுள்ளன. இதனால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

மோசமான வானிலை காரணமாக 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் பாதுக்கை பிரதேச செயலக பிரிவுக்கும், களுத்துறை மாவட்டம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் 12 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் சிவப்பு மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன் கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, கேகாலை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள 41 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







## பால் வாங்க சென்ற சகோதரிகள் மரணம்

**எம். றொசாந்தன்**

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறையில் குளம் ஒன்றினுள் துவிச்சக்கர வண்டியுடன் விழுந்து இரு சிறுமிகள், சனிக்கிழமை (01) இரவு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவத்தை அறிந்து அதிர்ச்சியுற்று மயக்கமடைந்த தாய் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை நாரந்தனை தெற்கு சூரியவத்தை பகுதியை சேர்ந்த 11 வயதுடைய நிரஞ்சன் நிதுசா மற்றும் 5 வயதுடைய நிரஞ்சன் அனுஷ்கா ஆகிய இரு சிறுமிகளே உயிரிழந்துள்ளனர்.

வறிய குடும்பத்தைச் சேர்ந்த குறித்த இரு சிறுமிகளும் வீட்டில் இருந்து துவிச்சக்கர வண்டியில் கடைக்கு பால் வாங்க சென்றுள்ளனர். பால் வாங்க சென்ற இருவரையும் காணவில்லை என குடும்பத்தினர் தேடிய போது கடைக்கு சற்று தொலைவில் உள்ள குளத்திற்குள் இருவரும் சடலமாக காணப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2




## சேமக்காலையில் பெண்ணை தீயிட்டு கொளுத்திய இளைஞன்

**எம்.றொசாந்த்**

பெண்ணொருவரை சேமக்காலைக்கு அழைத்து சென்ற இளைஞன் , பெண் மீது பெற்றோல் ஊற்றி எரித்து படுகொலை செய்துள்ள சம்பவம் சனிக்கிழமை (01) இடம்பெற்றுள்ளது .

சாவகச்சேரி - மட்டுவில் பகுதியை சேர்ந்த 45 வயதுடைய இரத்தினவடிவேல் பவானி எனும் பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “தமிழ் வேட்பாளர் சாத்தியமில்லை”

**எஸ். நிதர்ஷன்**



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது சாத்தியமற்ற விடயமாகும் என தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ. கே.சிவஞானம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### மாகாண சபைத் தேர்தலை

## “சுமந்திரனின் ஆலோசனையில் ரணில் ஒத்திவைத்தார்”



**கனகராசா சரவணன்**

தேர்தல்களை ஒத்திவைப்பதில் ஜனாதிபதி ரணில் கெட்டிக்காரர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஆலோசனையின் பேரிலேயே 2015 மாகாணசபை தேர்தல் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு,

தொடர்ச்சி P2

## “பிரபாகரனின் கூட்டமைப்பை அழித்தவர்களே கூறுகின்றனர்”



**எஸ்.ஆர்.லெம்பட்**

தமிழ் பொது வேட்பாளர், நடைமுறைச் சாத்தியமில்லாத ஒன்றென தெரிந்தும் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் முனங்கிக் கொண்டே ஓடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அத்தனை பேரும் தான் பிரபாகரன் உருவாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பை அழித்தவர்கள் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

அனைவரும் இணைந்து ஒரு தலைமையை தேர்ந்தெடுக்க முடியாதவர்கள், தாமே ஓரணியாக வரமுடியாதவர்கள் மக்களை ஒன்று படுத்த போவதாக கூறுவது வேடிக்கையானது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்பது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் ஒன்றுபட போவதில்லை. அப்படி ஒன்றுபட்டு நின்று தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் அதற்கு ஆதரவாக பிரசாரங்களை முன்னெடுக்க நான் மட்டுமல்ல தமிழ் மக்கள் ஓரணியாகுவார்கள், வெற்றியும் பெறலாம் என்றார்.

தொடர்ச்சி P2



## ரஞ்சித்துக்கு ஐ.தே.க உறுப்புரிமை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு கட்சியின் உறுப்புரிமையை வழங்கி,

கட்சியில் மீள இணைத்துக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஞாயிற்றுக்கிழமை (02) தீர்மானித்துள்ளது.

ரஞ்சித் மத்தும பண்டாரவின் கட்சி உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி 2020 இல் இடைநிறுத்தியது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பால் வாங்க சென்ற சகோதரிகள் மரணம்

குளத்தின் வரம்பு வழியாக துவிச்சக்கர வண்டியை செலுத்திய வேளை அருகில் இருந்த கல் தடக்கி , துவிச்சக்கர வண்டியுடன் தவறி குளத்துக்குள் விழுந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இரு சிறுமிகளின் சடலங்களும் மீட்கப்பட்டு , ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மரண விசாரணை அதிகாரி நாகராஜா தியாகராஜா, ஊர்காவற்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு சிறுமி ஒருவர் கடந்த வருடம் விபத்தில் உயிரிழந்த நிலையில், தற்போது இருவரும் உயிரிழந்தமை அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இருவருது சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படவுள்ளது.

# 9 பேர் மரணம்

விழுந்த மரம் இரு பாதைகளிலும் இடையூறு ஏற்படுத்தியதால், அப்பகுதியில் குறிப்பிடத்தக்க தாமதம் மற்றும் நெரிசல் ஏற்பட்டது.

வீதியின் பாதிக்கப்பட்ட பகுதியைத் தவிர்ப்பதற்கு மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு வாகன சாரதிகளுக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ அறிவுறுத்தியுள்ளார்.

“பணியாளர்கள் குப்பைகளை அகற்றி வழக்கமான போக்குவரத்தை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்,” என்று அவர் மேலும் கூறினார்.

கர்ப்பிணிகள் ஹெலியில் மீட்பு

நெலுவ வைத்தியசாலைக்கு செல்லும் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், அந்த வைத்தியசாலையிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவசர நோயாளிகள் அனைவரும் ஹெலிகொப்டர்கள் மூலம் உடுகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக காலி மாவட்ட சமூக சுகாதார வைத்திய அதிகாரி அமில சந்திரசிறி தெரிவித்தார்.

நெலுவ வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டிகள் செல்ல முடியாத காரணத்தினால் தாய்மார்கள் மற்றும் நோயாளிகள் ஹெலிகொப்டரில் அழைத்து வரப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடும் மழையுடன் கூடிய ஜிங்கங்கை பெருக்கெடுத்துள்ளதால் தவலம பிரதேசத்தில் இருவர் காணாமல் போயுள்ளதாக காலி மாவட்ட பதில் மாவட்ட ஆணையாளர் சாமி ராஜகருணா தெரிவித்தார்.

தவலம, நெலுவ, உடுகம, ஹினிதும முதலான பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காக இராணுவம் மற்றும் கடற்படையின் நிவாரண சேவைக் குழுக்கள் படகுகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுடன் அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, நிவாரணப் பணிக்குழுவினர் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்தனர்.

மின்சாரம் துண்டிப்பு

மழையுடனான சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் மற்றும் மண்சரிவை அடுத்து, நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

பாதுகாப்பு காரணங்களை முன்னிலைப்படுத்தி மின்சாரம் தடைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு கூறியுள்ளது. அத்துடன், பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது

# சேமக்காலையில் பெண்ணை தீயிட்டு கொளுத்திய இளைஞன்

யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு குறித்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்ற இளைஞன் , பெண்ணுடன் கல்லறை ஒன்றின் மீது அமர்ந்து பேசிக்கொண்டு இருந்துள்ளனர் .திடீரென இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட போது , இளைஞன் மறைத்து வைத்திருந்த பெற்றோல் போத்தலை எடுத்து பெண்ணின் மீது ஊற்றி தீ வைத்துள்ளார்.

அதனை அவதானித்த அயலவர்கள் ஓடி சென்று தீயினை அனைத்து , பெண்ணை நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த்துள்ளனர் . வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி பெண் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தன்னுடைய தாயின் கல்லறையில் தீபம் ஏற்றி தீ வைக்கவேண்டும் என்றே அப்பெண்ணை, இளைஞன் அழைத்துச் சென்றுள்ளார்.

உயிரிழந்த பெண் சந்தேக நபருடன் சுமார் 8 வருடங்களாக தொடர்பு வைத்திருந்ததாகவும், பின்னர் சந்தேக நபர் வேறு ஒரு பெண்ணுடன் நட்பை ஏற்படுத்தி அவளை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பின்னர், சந்தேகநபருக்கும், மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலேயே, தீயிட்டு கொளுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் வயர்(40) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “தமிழ் வேட்பாளர் சாத்தியமில்லை”

யாழ். ஊடக அமையத்தில் சனிக்கிழிமை (01) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

“நான் பொது வேட்பாளருக்கு மாறானவன். பொது வேட்பாளர் தேவையற்றது என அரசியல் வாதிகளுக்குள்ளேயே முதன் முதலில் எங்கட தரப்பில் இருந்து சொன்னவரும் நான் தான்” என்றார்..

“அதாவது பொது வேட்பாளர் சாத்தியமில்லை என்றும் அதற்கான காரணங்களையும் நான் கூறியிருக்கிறேன். இப்பவும் சொல்கிறேன் பொது வேட்பாளர் யார் என்ற தெரிவிலேயே இந்த விடயம் முதலில் முடங்கும்” என்றார்.

கடந்த கால தேர்தல்களில் நாங்கள் நிரூபித்து வந்த மக்கள் ஆணை மலினப்படுத்தப்படும் என்ற கருத்தையும் கூறிக் கொள்கிறேன். அதாவது கடந்த தேர்தலில் தேசியத்துக்கு விழுந்த வாக்கை எடுத்துப் பார்த்தால் அது புரியும். இப்ப மேலும் நாங்கள் பிளவுபட்டு இருக்கிற போது என்ன நடக்கும் என்பதையும் சிந்தித்து பார்க்க வேண்டியது அவசியம் என்றும் கேட்டுக்கொண்டார். .

ஆனால், ரணில்விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குத் தான் இவர்கள் பொது வேட்பாளரை முன்வைத்தார்கள் என்ற அந்தக் கருத்தில் நான் உடன்படவில்லை. இந்த பொது வேட்பாளர் விடயத்தை முதலில் பேசியது சுரேஸ் பிரேமச்சந்திரன் தான். அது அவரது நியாயமான கருத்து.

அதனை நான் பிழை என்று சொல்லவில்லை. அதில் நான் உடன்படவே இல்லையே ஒழிய அந்த மாதிரியான கருத்து நிலைப்போடு சுரேஸ் பிரேமச்சந்திரன் இதனை முன்னெடுத்திருப்பார் என்ற எண்ணம் எனக்கில்லை.

எங்குடைய தமிழரசுக் கட்சியை பொறுத்தவரையில் கட்சி ரீதியாக இதுவரையில் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. ஆனாலும் கட்சி உறுப்பினர்கள் தனித்தனியே இது பற்றி பேசி வருகிறார்கள். இந்த விடயம் தொடர்பில் சில தினங்களிற்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுவில் நாங்கள் பேசியிருந்தோம்.

இந்த விடயத்தில் கட்சிக்குள்ளும் இரண்டு கருத்துக்கள் இருந்தன. அப்படி தொடர்ந்தும் இருக்கும். இல்லாமலும் போகலாம். எனினும் சில நேரத்தில் நீயும் சொல்லு நானும் சொல்லுறேன் என்றவாறாகவும் இருக்கலாம்.

ஏனெனில், கட்சி முடிவெடுக்காமல் இருக்கிற போது கட்சி என்று சொல்லி சில பேர் தனித் தனியாகவும் பேசியிருக்கலாம். அப்படி பேசி இருப்பதாகத் தான் செய்திகளும் வருகிறது. எனினும் கட்சி முடிவெடுக்காமல் இருக்கிற போது இதற்கானநேரம் வரும் போது பார்த்துக் கொள்வோம் என்றார்.

மேலும் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியை பணிய வைக்கலாம் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். இவரை போல எத்தனையோ பேரை நாங்கள் கண்டிருக்கிறோம். ஒரு பாரம்பரிய கட்சிகயை பற்றி அப்படியெல்லாம் பேசுவதா?

அதுமட்டுமல்ல யாழ்ப்பாண மக்களை உசுப்பேற்றி பணிய வைப்பதாகவும் கூறியிருக்கிறார். அப்படி உசுப்பேற்றி யாழ்ப்பாண மக்களைபணிய வைக்க முடியுமா? ஏதோ கதைக்க வேண்டும் என்பதற்க்காக எங்கள் கட்சியை பற்றி எதையாவது கதைத்துவிட்டு செல்வதா?

உசுப்பேத்தி எங்கள் மக்களை எதுவும் செய்யலாம் என்று யாரும் சொல்வது தவறு. எதனையும் மக்கள் தீர்மானிப்பார்கள். சரியென்றால் ஏற்றுக் கொள்வார்கள் இல்லையென்றால் விலக்கி வைப்பார்கள். இதனை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

# “சுமந்திரனின் ஆலோசனையில் ரணில் ஒத்திவைத்தார்”

தேர்தல் நடைபெறாமல் செய்யப்பட்டது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், அன்றிலிருந்து இன்று வரை பல தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றார்.
மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள கோவிந்தன் கருணாகரன் எம்.பியின் காரியாலயத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
ஜனாதிபதி பொது வேட்பாளர் என்கின்ற விடயம் தமிழ் தேசிய பரப்பிலே இருக்கும் அனைவராலும் கொள்கை ரீதியாக முதலாவதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் அதற்கு பின்புதான் வேட்பாளர் யார் எந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தீர்மானிக்க வேண்டும்.
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பொது வேட்பாளர் கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும் என்கின்ற அவர்களுடைய எண்ணக்கருவை வெளியிட்டுள்ளனர் அதற்கு சில அரசியல் காரணங்களும் இருக்கலாம்.
கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் மூவின மக்களும் கிட்டத்தட்ட சமனாக வாழும் ஒரு மாகாணம்.
அது மாத்திரம் அல்லாமல் குறிப்பிட்ட காலம் வடக்கு, கிழக்கு என்ற பிரிவினைவாதம் சில அரசியல் வாதிகளாலும் அரசியல் கட்சிகளாலும் தங்களது சுயலாப அரசியலுக்காக முன்னிலைப்படுத்தப்பட்டு பிரதேச வாதம் விதைக்கப்பட்டுள்ளது.
இதன் காரணமாக வடமாகாணத்தில் இருந்து பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால் கிழக்கு மக்கள் அந்த பிரதேச வாதத்தில் சிக்குண்டு வாக்களிக்காமல் விடலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவர்கள் கூறியிருக்கலாம். ஆனால், பெரும்பாலான தமிழ் மக்கள் பிரதேச வாதத்துக்குள் சிக்குபட்டவர்கள் அல்ல.
அவர்கள் கடந்த காலங்களிலும் சரி, தற்போதும் சரி தமிழ் தேசியத்தில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்
இந்த நாடு ஒரு ஜனநாயக நாடா என்பது ஒரு கேள்விக்குறி ஏனென்றால் பல தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டும் நடத்தப்படாமல் இருப்பது சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்களுக்கு கைவந்த கலையாகும்.
குறிப்பாக தேர்தலை பின்போடுவதில் ரணில் வலு கெட்டிக்காரர் கிழக்கு மாகாண சபை தேர்தல கடந்த 7 வருடங்களாக நடைபெறவில்லை
அதேபோன்று 9 மாகாணங்களதும் தேர்தல்கள் நடாத்தப்படாமல் ஆளுநரின் கீழே நிர்வாக செயற்பாடு இடம்பெற்றுவருகின்றது.
ரணில் பிரதமராக 2015 இருந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் ஆலோசனையின் வழிநடத்தலில் அந்த மாகாணசபை தேர்தல் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு ரணில் கொண்டுவந்து தேர்தல் நடைபெறாமல் இருக்கின்றது.
அதேபோன்று 2023 வேட்புமனு கோராப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
தேர்தல்கள் ஒத்திவைப்பதில் ரணில் வலு கெட்டிக்காரர்
இருந்தாலும் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை அவர் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த நேரத்திலே ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் தேர்தலை 2 வருடங்களுக்கு ஒத்திவைக்கும் ஆலோசனையை கூறியுள்ளார். அதேவேளை, அந்த கட்சியின் தவிசாளர் தெற்கில் நடந்த கூட்டத்தில் தேர்தல் உரிய காலத்தில் நடக்கும் என்கின்றார் ஆனால் ஜனாதிபதி இந்த கருத்தற்கு எந்தவிதமாக கருத்தும் தெரிவிக்கவில்லை
இந்த அடிப்படையில் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்பதில் ஒட்டு மொத்தமான மக்களும் குழம்பியுள்ளனர். ஆனால், ஜனநாயக நாடு என்றால் குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் நடாத்தவேண்டும் அல்லாவிடின் அவர்கள் மக்கள் விரோதிகளாக ஜனநாயகத்தின் விரோதிகளாக கணிக்கப்படுவர் என்றார்.

# “பிரபாகரனின் கூட்டமைப்பை...

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு நிலைப்பாடு, தமிழரசுக் கட்சிக்குள் இருவேறு நிலைப்பாடுகள், ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி ஒரு நிலைப்பாடு. தமிழ்த் தேசியப் பரப்பிலே மக்கள் ஆதரவு கொடுக்கும் இக் கட்சிகளே ஒன்றாக இல்லை.
பதவிப் போட்டிகளை தீர்க்க முடியாத கட்சிகள், மக்கள் பிரச்சினையை தீர்ப்பதாக கூறுவது ஏமாற்று வேலையாகும்.
ஆக மொத்தத்தில் சஜித், ரணில், அனுர, பகிஷ்கரிப்பு, தமிழ் பொது வேட்பாளர் என்ற பஞ்ச நிலை முடிவுகளை தான் மக்கள் பகிர்ந்து கொள்ளப் போகிறார்கள்.மக்களின் இந்த முடிவுகளுக்கு தமிழ் கட்சிகளைத் தவிர வேறு யாரும் காரணமாக இருக்க முடியாது.
தமிழ் பொது வேட்பாளர் விடயம் பல படிகளை தாண்ட வேண்டியிருக்கும். யார் வேட்பாளர், எந்த கட்சியில் போட்டியிடுவது, வடக்கா, கிழக்கா, ஆணா, பெண்ணா.
ஒவ்வொரு கட்சிகளும், தலைமைகளும் எடுக்கின்ற நிலைப்பாட்டுக்கு மாறான கருத்துக்களை அதே கட்சியை சேர்ந்தவர்கள் எடுக்கின்ற நிலைப்பாடும் வரும்.
தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனும், சிறிதரனும் ஒரே கருத்தில் இல்லை. அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணிக்கு வராது விட்டால் தமிழ் மக்கள் ரணிலுக்கு, அனுரவுக்கு, சஜித்துக்கு, தமிழ் பொது வேட்பாளருக்கு என-வெவ்வேறு தீர்மானங்களை எடுப்பார்கள்.
சிலர் பகிஷ்கரிப்புக்கும் செல்வார்கள். எந்தவொரு தமிழ் கட்சியினதும் கோரிக்கைகளை ஏற்காமல் தம் விருப்பத்தின் பிரகாரம் மக்கள் வாக்குச் சாவடிக்கு செல்வார்கள். தமிழ் தலைமைகள் பூ மிதித்தல் என ஆசையூட்டி மக்களை தீ மிதித்தலுக்குள் தள்ளிவிடுதல் பெரும் ஆபத்தானதாகும்.
கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை நாம் ஆதரிக்கவில்லை. ஐந்து வருடங்களில் என்ன மாற்றம் வந்தது தமிழ் வேட்பாளரை ஆதரிக்க, சஜித்துக்கு வாக்களித்தோம் அவர் வெல்லவில்லை.
வென்றிருந்தால், மைத்திரி போல் ஏமாற்றி இருந்தால் அவரை விட்டு விடலாம்.
ரணிலுக்கும் நாம் வாக்களிக்கவில்லை. ஆகவே, நாம் வாக்களித்தவர்களோ, வாக்களிக்காதவர்களோ இன்னும் வெற்றி பெறவில்லை அனுரகுமார உட்பட.
அதை விட மக்கள் மனங்களை, மக்களின் நாடித்துடிப்பை கண்டறிந்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.
கடந்த காலங்களில் மக்கள் முடிவெடுத்த பின்னரே கட்சிகளும், தலைமைகளும் முடிவு எடுத்திருக்கின்றன.
பட்டுணர்ந்தும் தமிழ் கட்சிகள் ஒன்றுபட மறுப்பது துரதிஸ்டமானது. தமிழ் மக்களின் சாபக்கேடானது, அம்பாறை பறிபோய்விட்டது.
அடுத்த பாராளுமன்ற தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் திருகோணமலையில் பறிபோய்விடும்.ஒற்றுமையாக தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருந்தே சில நூறு வாக்குகளால் தான் சம்பந்தன் ஐயா வென்றார். இப்போ பிரிந்திருப்பது திருமலையை பறிகொடுக்கத்தான். பிரிந்து சென்றால் வன்னியிலும் இதே நிலைதான் ஏற்படும்.

இப்படியிருக்க ஜனாதிபதி தேர்தலில் இராமன் வென்றாலும் இராவணன் வென்றாலும் ஒன்றுமே நடக்கப்போவதில்லை என சொல்லிக் கொண்டு முட்டாள் தனமான முடிவு களை எடுக்காமல் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரஞ்சித்துக்கு ஐ.தே.க உறுப்புரிமை

எவ்வாறாயினும், கட்சி அங்கத்துவம் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளை தொடர்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், ஞாயிற்றுக்கிழமை (02) கூடிய செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

# ரணில்-மஹிந்த புதனன்று சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் புதன்கிழமை (05) இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்திய பேச்சுவார்த்தை மிக நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றது. அந்த பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான ஸ்ரீலங்ாக பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை, தலைவர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கவுள்ளார். இந்நிலையிலேயே இருவருக்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தலைமையிலான புதிய



அரசியல் கூட்டணியினர் 8ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளனர். இந்த கூட்டத்தை அமைச்சர் மஹிந்த அமரவீர ஏற்பாடு செய்கின்றார். அத்துடன் அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஏற்பாட்டில் மாத்தறையில் எதிர்வரும் 16ஆம் திகதி கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகத்தினால் ஏற்பாடு செய்த சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிகழ்வு (ஜூன் 02) மருதமுனையில் இடம்பெற்றது.
சர்வதேச சைக்கிள் தினமான ஜூன் 3 தினத்தை முன்னிட்டு, ரைடர்ஸ் கழகத்தின் தலைவர் கலீல் கபூர் தலைமையில் நடைபெற்றது.

இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வானது, ‘சைக்கிள் ஓட்டுதலை கொண்டாடுவோம்‘, ‘சைக்கிள் பாவனையை ஊக்குவித்தலால் ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவதோடு மாசற்ற சுற்றுச்சூழலை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லும் முன்னோடிகளாவோம்’. ‘ஆரோக்கியமான காபனற்ற பசுமையான பூமி கிரகத்தின் உருவாக்கத்தில் பங்காளிகளாகுவோம்’ எனும் கருப்பொருட்களை கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- ஏ.எல்.எம்.ஷினாஸ்








## தொழிலாளர்களின் உரிமைகளுக்காக

# குதித்தார் ஜீவன்

■ மலையக நிருபர்கள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் சனிக்கிழமை (01) மாலை நுவரெலிய பொலிஸ் நிலையத்திற்கு வருகைத் தந்த நிலையில் அமைதியின்மை ஏற்பட்டது.

நுவரெலியா - உடரதெல்ல - பீட்றூ பெருந்தோட்ட நிறுவனத்தில் பணியாற்றிய தொழிலாளர்களை, தோட்ட நிர்வாகம் அண்மையில் பணிநீக்கம் செய்திருந்தது.

இதையடுத்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சென்று களனிவெளி தோட்டத்திற்கு சொந்தமான தொழிற்சாலையின் பணிகளை இடைநிறுத்தி போராட்டம் நடாத்தியிருந்தனர்.



இதையடுத்து, பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணிக்கு அமர்த்துவதாக தோட்ட நிர்வாகம் உறுதி வழங்கியதை அடுத்து, போராட்டம் கைவிடப்பட்டது.

தமது பணிக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சக்திவேல் உள்ளிட்டோருக்கு எதிராக தோட்ட நிர்வாகம் முறைப்பாடு செய்துள்ளது.

இதையடுத்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலிய பொலிஸ் நிலையத்திற்கு சென்ற நிலையில், அங்கு அவரது ஆதரவாளர்களும் ஒன்று கூடியுள்ளனர். இதன்போதே, அங்கு அமைதியின்மை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து, தோட்ட நிர்வாகம் முறைப்பாட்டை வாபஸ் பெற்றதுடன், தொழிலாளர்களுக்கான அடிப்படை உரிமைகளை பெற்றுக்கொடுப்பதாக இதன்போது உறுதியளித்துள்ளது.

இதையடுத்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

## மலையக மக்களிடம்

# “ரவுடிதனம் எடுபடாது”



■ ரஞ்சித் ராஜபக்ஷ

மலையகத்தில் அரசியல்வாதிகள் சிலர் சட்டத்தை கையிலெடுத்து ரவடிதனத்தை காண்பித்து மக்களின் வாக்குகளை பெற முயற்சித்த போதிலும், மலையக மக்களிடம் அந்த ரவுடிதனம் எடுபடாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

நோர்வூட் மானலி தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கான கூரைத் தகடுகள் வழங்கும் நிகழ்வில், ஞாயிற்றுக்கிழமை (02) கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பழனி திகாம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் சாசனத்தின்படி தேர்தலை தள்ளிப்போட ஆளும் கட்சி முயற்சிக்கிறது. மொட்டு இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்த அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெறாது, அதனால்தான் தள்ளிப்போட முயல்கிறார்கள்,.

சில தொழிற்சங்க தலைவர்கள் தோட்டங்களில் வேலை செய்யவில்லை, அதனால் ஒரு சிறிய லஞ்சம் கொடுத்து ஆட்களை வைத்திருக்கலாம் என்று நினைக்கிறார்கள், இப்போது தோட்ட மக்கள் நன்கு படித்தவர்கள்,

அரசியல்வாதிகள் சட்டத்தை கையில் எடுப்பதை நான் ஏற்கவில்லை, எனது ஆட்சியில் நான் சட்டத்தை கையில் எடுத்ததில்லை.

ஒரு பொலிஸ் அதிகாரி திடீரென்று பொறுமை இழந்து துப்பாக்கிச்சூடு நடத்தினால் என்ன செய்வீர்கள்? எனவே, அரசாங்கம், இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அரசாங்கம் நுவரெலியாவுக்கு வந்து வாக்கு கேட்க முடியுமா? 2015 இல் மைத்திரிபால சிறிசேனவை விட .சஜித் பிரேயமதாச அதிக வாக்குகளைப் பெற்றார்.

# யார் தெரியுமா?



சிறுமியைபாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி அவரை படுகொலைச் செய்தார் என்றக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தப்பியோடிய சிறைச்சாலை கைதி ஒருவர் தொடர்பில் தலைமன்னார் பொலிஸார், பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

இவர், தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 9 வயது சிறுமியை பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.


வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், தப்பியோடிவிட்டார்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் என்பவரே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளார்.

புகைப்படத்தில் காணப்படும் இந்த நபர் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் 0718591364 அல்லது 0718591370 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மின்கம்பத்தில் மோதி விபத்து; ஒருவர் பலி

■ வ.சக்தி



மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடத்தில் சனிக்கிழமை (01) மாலை இடம்பெற்ற விபத்தில், களுவதாளைக் கிராமத்தைச் சேர்ந்த 18 வயதுடைய திவாகரன் ஹபிசாயன் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த மற்றுமொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இளைஞர்கள் இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் கிரான்குளம் பகுதியிலிருந்து களுதாவளை நோக்கி மிகவும் வேகமாக சென்ற போது குருக்கள்மடம் வளைவு பகுதியில் வைத்து மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரியவந்துள்ளது .

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பசு வதையை எதிர்த்து போராட்டம்

■ பு.கஜிந்தன்


பசு வதைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பசுவதை தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் கோரியும் அராலி பகுதியில் போராட்டமொன்று ஞாயிற்றுக்கிழமை (02) முன்னெடுக்கப்பட்டது.

இரண்டு பசுக்களை கொலை செய்த கொலைக் களங்கள் முற்றுகையிட்டு சீல் வைக்கப்பட்டன.

உருத்திரசேனையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் மறவன்புலவு சச்சிதானந்தம், ஊர்காவற்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா, மாணவர்கள், இளைஞர் - யுவதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# பண மோசடி; மதபோதகர் கைது

■ ஷ்.றொசாந்த்



யாழ்ப்பாணம் , கொடிகாமம் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி 15 இலட்சம் ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டில் , நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த மதபோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்கள் ஆகியும் வெளிநாட்டு பயணம் சரி வராததால் , கொடுத்த பணத்தினை இளைஞன் திருப்பி கேட்ட போது , போதகர் காசோலையை வழங்கியுள்ளார்.

காசோலையை வங்கியில் வைப்பு செய்த போது கணக்கில் பணம் இல்லை என காசோலை திரும்பியுள்ளது. அதை அடுத்து போதகரை இளைஞன் தொடர்பு கொண்டு கேட்ட போது, தனக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதாகவும் , தன்னால் என்னவும் செய்ய முடியும் என இளைஞனை மிரட்டியுள்ளார்.

அதனை அடுத்து இளைஞன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து , விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , நீர்கொழும்பில் வைத்து போதகரை கைது செய்து யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் போதகரை முற்படுத்திய போது , அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது .

# கண்டி தமிழ் வர்த்தக சங்கம் கை கொடுத்தது

■ மெய்யன்





கண்டி மடுல்கலை நெல்லிமலை தோட்டத்தில் பெய்த அடைமழையினால் பாதிக்கப்பட்டு, சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களை கண்டி தமிழ் வர்த்தகர் சங்க பிரமுகர்கள் பார்வையிட்டனர்.

அம் மக்களுக்கு அவசியமான உணவு மற்றும் சுகாதார வசதிகளுக்கான பொருட்களை வழங்கினர். அத்துடன், நெல்லிமலை பின்தன்ன பெருந்தோட்ட நிர்வாகத்தோடு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உலருணவுப் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை, பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் செல்லமுத்துப்பிள்ளை சுரேஸ்குமார் மேற்கொண்டிருந்தார்.



# ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை உடைப்பு நாட்டுக்கு நல்லதல்ல

நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பு, இறையாண்மையின் அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைத்துள்ளது. அந்த இறையாண்மையின் அடிப்படையில் மக்கள் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்புகின்றனர். நாட்டின் தலைமை குடிமகன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

நாட்டின் பெரும்பான்மையினரின் விருப்பப்படியே இவை அனைத்தும் நடக்கின்றன. ஜனநாயகம் என்றால் அதுதான். அந்த ஜனநாயகம் அதற்குரிய கனத்துடன் செயல்படுவதற்கு நாட்டில் இணக்கமான சூழல் உருவாக வேண்டும். துரதிஷ்டவசமாக, அதற்குத் தடையாக இருக்கும் ஒரு சூழ்நிலை நாட்டில் அவ்வப்போது உருவாகி வருகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவே நேரடிப் பொறுப்பு என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியிருந்தார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தவறானவை மற்றும் சட்டத்திற்கு முரணானவை எனவும் தெரிவிக்கப்பட்டதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மிகவும் குறைபாடுள்ளவை என சட்டமா அதிபர் அம்பலப்படுத்தினார்.

உள்ளூராட்சி தேர்தல் என்பது கிராமத்தில் உள்ள நிர்வாக அலகுக்கான தேர்தல். சர்வஜன வாக்குரிமைக்கான உரிமையை மக்கள் பயன்படுத்துவதற்கான முதல் வாய்ப்பு இதுவாகும். தேர்தலை நடத்தாததன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரலும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான நெரீன் புள்ளே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாததன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்றார்.

ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு சரியான நேரத்தில் தேர்தல் அவசியம். குடிமகன் என்ற முறையில், விரும்பிய இலக்குகளை நோக்கிச் செல்ல சுதந்திரமான இடம் இருக்க வேண்டும். தேர்தல்கள் சரியான நேரத்தில் நடத்தப்பட வேண்டும். அந்தக் கருத்துக்கு இடமில்லை என்று தோன்றும்போது, காடுகளின் சட்டம் அங்கு மாற்றப்படும் என்று எதிர்பார்க்க வேண்டும்.

ஜே.ஆர் ஜயவர்தன ஆட்சிக் காலத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படாமல், வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீட்டிக்கப்பட்டது. இது இளைஞர் சமுதாயத்தை கடுமையாக பாதித்தது. நாட்டின் ஆட்சியில் பங்கு கொள்ள இடமில்லை என்று இளைஞர்கள் நினைப்பது நியாயமானது. இறுதியாக, சிந்தனை வன்முறையாக வெடித்தது. 60,000 பேரின் உடல்களுடன் போர் முடிவுக்கு வந்தாலும், அந்தப் போரின் ஆழமான படிப்பினையைப் படிப்பது ஜனநாயக அபிலாஷைகளைக் கொண்ட அனைவரின் பொறுப்பாகும்.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது கொழும்பில் இருந்து சென்ற குண்டர்களால் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. அந்த நெருப்பு கத்தி முனை போல் யாழ்ப்பாண இளைஞனின் நெஞ்சுக்குள் ஊடுருவியது. தர்க்கரீதியான முடிவு என்னவென்றால், பிரபாகரனுக்கு தற்கொலை மனித வெடிகுண்டு தயாரிக்க எளிதான இடம் கிடைத்தது.

மாகாண சபைத் தேர்தலுக்கு என்ன நடந்தது என்று கேட்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் தற்போதைய ஜனாதிபதிக்கு மேலும் 2 வருட கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார அறிவித்துள்ளார். இத்தகைய முடிவுகள் சமூகத்தை நோயுறச் செய்யும். ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை உடைந்துவிட்டது. அது நாட்டுக்கு நல்லதல்ல.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க மௌனமும், ஒதுங்கி ஒளிவதும் சரிப்பிட்டுவராது. வீரமுடன் எதிர்கொண்டால் எல்லாம் சரிவர நிவர்த்தியாகிவிடும்.

ஆனால், பிரச்சினைகளுக்கு நீங்களே! காரணமாகி அதனை பிறர்மீது சாட்டுதல் செய்வது துரோகம். தேவையற்ற விதத்தில் உங்களை எவர் உட்படுத்தினால் அதனைக் கண்மூடிக் கொண்டிருப்பது ஏற்படையதல்ல.

இதனால் தேவையற்ற குற்றச்சாட்டுகளை ஏற்பது போலாகிவிடும். இன்று குடும்பங்களுக்குள் தேவையற்ற தர்க்கங்களினால் அமைதி குலைந்து நிற்கிறது.

சின்ன விஷயங்களுக்கும் ஆவேசப்படுகின்றார்கள். குடும்ப விஷயங்கள், தவறான புரரிதலினால் உருவாகின்றன. எனவே, அதனை உடன் நீங்கிவிடலாம். அவை பூதாகாரமான விடயம் எனக் கருதலாகாது.

குடும்ப உறவு இறுக்கமானதாக இருக்க கோபங்களை களைவதுடன் குடும்ப அங்கத்தினரின் தேவைகளையும் புரிந்துகொள்ளவும் வேண்டும்.

பாசமிகு குடும்பத்தினர் எதனையும் ஒரு பொருட்டாகக் கருதுவதுமில்லை. ஒரு குடும்பம் பல குடும்பங்களுக்கு எடுத்துக்காட்டாகவேண்டும்.

- பருத்தியூர் பால-வயிரவநாதன்.

# குஜராத் கைதால் மீண்டும் சூடுபிடிப்பு

**லக்ஸ்மன்**

முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கப்பட்டு சரியாக 10 வருடங்களில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் நடைபெற்றன. அக்குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் என்ற தகவல் வெளியானதால் விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டும் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது. இல்லையானால் எதற்கெடுத்தாலும் புலிகள் மீதே குற்றம் சுமத்தும் படலத்தின் ஒரு பக்கமாகியிருக்கும். இருந்தபோதிலும் இப்போதும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான குற்றவாளிகள் தண்டிக்கப்படவேயில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து வருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதோ ஒரு விடயத்துக்காகவே ஒவ்வொன்றும் நடத்தப்பட்டிருக்கிறது. அல்லது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தவகையில் இந்தியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட நால்வரும் சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அடையாளம் காணப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதில் ஓர் அங்கமாகத்தான் இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, குஜராத்தில் கைதான இலங்கை பிரஜைகளுக்கு இலங்கையில் எவ்வாறான தொடர்புகள் உள்ளன?, அவர்களது தொடர்பாடல் வலையமைப்புக்கள் எவ்வாறானவை என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை புலனாய்வு பிரிவினரை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்ற வகையில் கருத்துத் தெரிவித்துள்ளமையினைக் குறிப்பிடமுடியும்.

அத்துடன், முஸ்லிம்களுக்கு எதிராக அநீதி இழைப்பதாகக் குறிப்பிட்டு பாரதிய ஜனதா கட்சி மீது தாக்குதல்கள் நடத்துவதே குஜராத்தில் கைதானவர்களின் நோக்கம். 4 இலட்சம் ரூபாவுக்காக தற்கொலை குண்டு தாக்குதல்களை நடத்த துணிகின்றனர். ஆயுதங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடி மீட்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் இவ்வாறானவர்கள் உள்ளனரா? அவர்களது தொடர்பாடல் வலையமைப்புக்கள் எவ்வாறுள்ளன என்பதை கண்டறிவதற்காக எமது புலனாய்வு பிரிவினர் குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான தீவிரவாத, அடிப்படைவாத போக்குடையவர்களை இனங்கண்டு அவர்களை பலவந்தமாகவேனும் புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் சரத் வீரசேகர கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இக்கருத்துக்கள் நாட்டு மக்கள் மத்தியில் குழப்பத்தையும் அச்சத்தையும் ஏறபடுத்துவதாகவே இருக்கிறது.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்புடைய இலங்கை பிரஜைகள் தொடர்பில் குஜராத் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இருந்தாலும், அவர்கள் இந்த அமைப்புடன் தொடர்புள்ளவர்கள் என்பதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் ஏதுமின்றி அவ்விசாரணைகள் நகர்கின்றன.

இலங்கையின் தென்பகுதியைச் சேர்ந்த மொஹம்மட் நுஸ்ரத், மொஹம்மட் பாரிஸ், மொஹம்மட் ராசீப், மொஹம்மட் நஸ்ராத் ஆகிய நபர்களே இவ்வாறு விசாரணைகளுக்கு உட்பட்டிருக்கின்றனர். அதே நேரத்தில் இலங்கையில் நடைபெற்று வருகின்ற விசாரணைகளில் அவர்களுடைய நண்பர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

குஜராத்தில் கைதான நபர்கள் தமிழ், சிங்கள மொழிகளை மாத்திரமே அறிந்திருக்கின்றனர். குறிப்பாக அரபு மொழி அவர்களுக்குத் தெரியாது. போதைப்பொருள் வர்த்தகம், இரத்தினக்கல் கடத்தல், கூலித் தொழில்களில் ஈடுபடுபவர்கள், சட்ட விரோத வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் என்ற வகையிலேயே இவர்கள் தொடர்பான பதிவுகள் காணப்படுகின்றன இருந்தாலும் ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்புபடுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் குஜராத்தில் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரட்ண பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நால்வரும் போதைக்கு அடிமையானவர்கள், மதத் தீவிரவாதிகள் அல்ல எனத் தெரிவித்திருக்கிறார்.

இவர்கள் தொடர்பான விரிவான விசாரணைகளை எமது உளவுப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. என்றும் தெரிவித்துள்ளார். ஆனாலும் இவர்களின் பயங்கரவாதச் செயற்பாடு தொடர்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அச்சம் இன்னமும் குறையவில்லை. ஈஸ்டர் தாக்குதல் 2019இல் நடைபெற்ற பின்னர்தான்; ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினைப்பற்றிய அழுத்தங்கள் இலங்கையில் அதிகரித்தன. மூன்று கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் கொழும்பின் பிரதான நட்சத்திர ஹோட்டல்கள் சிலவற்றை, இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட ஏப்ரல் 21 தாக்குதலில், வெளிநாட்டவர்கள் 40க்கும் மேற்பட்டவர்கள் உட்பட 268 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

முஸ்லிம் தற்கொலை குண்டுதாரிகளே, இந்தக் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். காத்தான்குடியை சேர்ந்த சஹ்ரான் காசீம் என்ற நபரே இந்தக் தாக்குதலுக்கு தலைமை தாங்கியிருந்தார். தாக்குதல் இடம்பெற்று இரு தினங்களின் பின்னர் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். குறித்த தாக்குதலுக்கு, உத்தியோகபூர்வமாக உரிமை கோரியது.

அவர்களது ஊடக வலயமைப்பான அமாக் செய்திமுகவரகம் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். பேராளிகளென்று அறிவித்தது. இதன் மூலம் இலங்கையிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டது. இதன்பின்னர் இந்தக் தாக்குதலுக்கு பல்வேறு வழிகளில் உதவியவர்கள் என்ற அடிப்படையில், பெருந்தொகையான முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இன்னமும் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. இவ்வாறானதொரு பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறவிருப்பதாக இந்தியா ஏற்கெனவே தகவல் ஒன்றை வழங்கியிருந்ததாகவும் அது தொடர்பில் சரியான நவடிக்கையை எடுக்கத் தவறினார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொலிஸ் மா அதிபராக இருந்த பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட பலருக்கெதிராக விசாரணைகள் நடைபெற்றன. ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இருந்தாலும் அக் குற்றம் தொடர்பில் இப்போதும் நீதி வழங்கப்படவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோர் இப்போதும் குரல் எழுப்பி வருகின்றனர். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குற்றவாளிகளுக்கு சர்வதேசத்தினால் நீதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் கடந்த வருடத்தில் விடுக்கப்பட்டது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இலங்கையர்கள் நால்வர் இந்தியாவில் கைது செய்யப்பட்டது ஒரு பெரும் அச்சத்துடனேயே பார்க்கப்படுவது ஒன்றும் பெரியவிடயமல்ல. கட்டாயமானதும்கூட என்றே சொல்லாம்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். சம்பந்தப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட விடயத்துக்குள் உள்ளூர் தேர்தல் அரசியலை இலக்குவைத்தே அனைத்து விசாரணைகளும் உரையாடல்களும் இடம்பெற்றன.

அதில் அரகலயவினால் விரட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாகச் சம்பந்தப்படுகிறார். அதற்கு உறுதுணையாக பிள்ளையான் எனப்படும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் தற்போதைய இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இருந்தார் என்ற வகையிலுக் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

ஒரு புறம் பிள்ளையானை முன்னிலைப்படுத்தி தங்களின் பிரசாரங்கள் முன்னெக்கப்பட்டன. மறுபுறம் கோட்டாபய ராஜபக்ஷவை இலக்கு வைத்தும் கருத்துக்கள் வெளிவந்தன.

ஒருவகையில், ஐ.எஸ்.ஐ.எஸ். விவகாரத்தை மறந்து தங்களின் தேவை கருதி கருத்துக்களை முன்வைக்கின்றனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. ஒன்று புதிதாக முளைத்தால் முன்னையவைகள் மறைந்து போகும் என்பதற்கு ஒப்பாக 2019க்குப்பின்னர் பல விடயங்கள் வந்து போயிருக்கின்றன. இருந்தாலும் இப்போது குஜராத்தில் கைதானவர்கள் தொடர்பாக இலங்கையின் பாதுகாப்பு நோக்கில் சிந்திக்காமல் இருக்கமுடியாது என்ற கோணத்தில் நிலைவரம் சூடு பிடித்திருப்பதாகவே கொள்ளமுடியும்.

இந்திய முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படுகிறது என்ற வகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தொடர்பில் விசாரணைகள் முடுக்கிவிடப்படுகின்றன. இஸ்லாமிய பங்கரவாத அமைப்புக்கள், இலங்கையை மீண்டும், ஒரு இலக்காக பயன்படுத்துவதற்கான சூழல் காணப்படுகிறது என்ற வகையிலும் மறுபக்கம் விசாரணைகள் நடைபெறுகின்றன. எது எவ்வாறானாலும் குஜராத் கைது விவகாரம் இலகுவிலோ மிகச் சாதாரணமாகவோ முடிந்துவிடாது என்பது மாத்திரம் உண்மை.

ஆனாலும், 2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டு 10 வருடங்களின் பின்னர் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இது முழு இலங்கையையும் பெரும் அச்சத்துக்குள் தள்ளிவிட்டது. அந்தவகையில், மக்கள் பாதுகாப்பு அச்சத்திலிருந்து இன்னமும் மீளமுடியாதிருப்பதற்கான காரணங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே.

அச்சமூட்டுவதும் அச்சமுடைய மனோநிலையில் சிங்கள மக்களை வைத்திருப்பதும் ஒருவிதமான தந்திரோபாயம் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும் என்றவகையில் இந்தியக் கைதுகள் பயன்படுத்தப்படாமலிருந்தால் சரி.

## கடிதங்கள்

### குப்பைகளினால் அவதி



ஹட்டன் ஸ்ரீ நிக்ரோதாராம விகாரைக்கு அருகாமையில் அமைந்துள்ள ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் வாகன தரிப்பிடத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் உரிய முறையில் எடுத்துச் செல்லப்படாததால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் ஸ்ரீ நிக் ரோதாராம ஆலயத்தின் உரிமையாளர் ஹட்டன் -டிக்கோயா மாநகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகள் இந்த இடத்தில் குவிந்து கிடப்பதால் தாம் உட்பட ஆலயத்திற்கு வரும் மக்கள் கடும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவித்தார்.

ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் வெசாக் போயாவை முன்னிட்டு இந்த இடத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூர் மக்களின் ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழலையும் கடுமையாக சேதப்படுத்தும் குப்பைகளை ஹட்டன் நகர சபை உடன் அகற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

செ.தி.பெருமாள்

# உலக சைக்கிள் தினம்





உலகம் முழுவதிலும் உள்ள கிராமபுறங்களில் வாழும் மனிதர்களுக்கு இன்றளவும் முதன்மையான போக்குவரத்து வாகனமாக இருப்பது மிதிவண்டி (Cycle) என்று சொன்னால் மிகையில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை நகரம், கிராமம் என்ற பாகுபாடின்றி உலகம் முழுவதிலும் உள்ள அனைத்து தரப்பு மக்களின் முதன்மையான போக்குவரத்து வாகனமாக இருந்துவந்த இந்த சைக்கிளை கண்டுபித்தவர்கள் பட்டறையில் உலோகங்களை உருக்கி காய்ச்சி அடிக்கும் சாதாரண கொல்லர்கள் (Blacksmith). என்றால் உங்களால் நம்பமுடிகிறதா நண்பர்களே வாருங்கள் அது பற்றி மேலும் தெரிந்துகொள்வோம்.

பதினேழாம் நூற்றாண்டில் பிரான்ஸில் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தவர் கோம்டி மீடி டீ ஷிவ்ராக் (Comte Mede De Sivrac). இவரது பெற்றோர்கள் மிகவும் கண்டிப்பானவர்கள் இவர் வீட்டைவிட்டு விளையாடக் கூட வெளியே அனுமதிக்க மாட்டார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். செல்வச்செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்தவர் என்பதால் இவரது அன்றாட பணி என்னவாக இருந்தது தெரியுமா நண்பர்களே? நேராநேரத்திற்கு சாப்பிட்டுவிட்டு தூங்குவதுதான் ஒரு கட்டத்தில் சும்மா இருந்து இருந்து வெறுத்துப்போன ஷிவ்ராக் நேரப்போகிற்க்காக அவ்வப்போது காய்ந்த மரதுண்டுகளை செதுக்கி வீட்டிற்கு தேவையான அலங்காரப் பொருட்களை தயாரிப்பதில் நேரத்தை செலவிட்டார். அப்படி ஒருநாள் மரதுண்டுகளை செதுக்கிக் கொண்டிருக்கும்போது தற்செயலாக அவரது சிந்தனையில் தோன்றிய வடிவம் தான் மிதிவண்டி.

சிந்தனைக்கு மரத்துண்டுகளால் உயிர்கொடுத்த ஷிவ்ராக் 1791-ஆம் ஆண்டு முழுக்க முழுக்க மரத்துண்டுகளால் செய்யப்பட்ட சைக்கிள் ஒன்றை வடிவமைத்தார். இந்த சைக்கிளை ஓட்டுபவர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு காலால் தரையை உந்தித்தள்ளி சைக்கிளை முன்னோக்கி உருளச்செய்ய வேண்டும்.

*'The Celerifere'* என்று அழைக்கப்பட்ட இந்தவகைச் சைக்கிளில் திசைமாற்றியோ (Steering), மிதிஇயக்கியோ (Pedals), தடையோ (Break) கிடையாது. பிரான்ஸ் நாட்டிலுள்ள Palais Royal என்ற இடத்தில் 1794-ஆம் ஆண்டு அறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தனது கண்டுபிடிப்பு பற்றி ஷிவ்ராக் விளக்கிக்காட்டினார். இந்த நிகழ்வுதான் சைக்கிள் உருவாவதற்கு காரணமாக இருந்தது

கோம்டி ஷிவ்ராக்கின் சைக்கிள் தொழில்நுட்பத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஜெர்மனியை சேர்ந்த கார்ல் வோன் ட்ரைஸ் (Karl Von Drais) என்பவர் 1817-ஆம் ஆண்டு ஒரு சைக்கிளை வடிவமைத்தார். ஆணிகளை தவிர்த்து எஞ்சிய பாகங்கள் அனைத்தும் மரத்தினால் வடிவமைக்கப்பட்டிருந்த இவரது சைக்கிளில்தான் முதன் முதலாக திசைமாற்றி எனப்படும் ஸ்டீயரிங் (Steering) வடிவமைக்கப்பட்டிருந்தது. ஓட்டுபவர் சீட்டில் உட்கார்ந்துகொண்டு காலால் தரையை உந்தித்தள்ளி சைக்கிளை முன்னோக்கி செலுத்த வேண்டும். கிட்டத்தட்ட முப்பது கிலோ வரை எடை கொண்டதாக இருந்த இந்த சைக்கிள் 1818-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் தேதி பாரிஸில் உள்ள புதிய கண்டுபிடிப்புகளை பாதுகாக்கும் நிறுவனம் ஒன்றில் பதிவுசெய்யப்பட்டு காப்புரிமை பெறப்பட்டது. உலகிலேயே முதன் முதலில் காப்புரிமை பெறப்பட்ட சைக்கிள் இதுதான்

உடல்நலம் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்ய வாழ்வுக்காகவும், உடல்நல முன்னேற்றத்திற்காகவும் சைக்கிள் ஓட்டுதலின் முக்கியத்துவத்தை நினைவுகூரும் வகையில், உலக சைக்கிள் தினம் ஆண்டுதோறும் ஜூன் 03 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது தினமும் சைக்கிள் ஓட்டுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி இங்கு தெரிந்துகொள்வோம்.

சைக்கிள் ஓட்டுவது உடலை சீராகவும், கட்டுடனும் வைக்க உதவுவது மட்டுமின்றி சுற்றுச் சூழலுக்கும் சிறந்தது.

சைக்கிள் பயன்பாட்டை அதிகரிக்கும் விதமாக ஐ.நா., சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3 ஆம் திகதி 'உலக சைக்கிள் தினம்' கடைபிடிக்கப்படுகிறது.

தினமும் நடை, ஓட்டம், விளையாட்டு, சைக்கிள் ஓட்டுதல் என ஏதாவது ஒரு வகையில் உடற்பயிற்சி மேற்கொள்வது உடல் நலத்துக்கு நல்லது. இதிலும் நடை, சைக்கிள் பயிற்சி இருதய பாதிப்பு, பக்கவாதம், கேன்சர், நீரிழிவு உட்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கிறது.

சைக்கிள்களுக்கு எரிபொருள் தேவையில்லை என்பதால் செலவும் இல்லை. முக்கியமாக சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உதவுகிறது. தினமும் சைக்கிள் ஓட்டுவதால் உடல் புத்துணர்ச்சி அடைகிறது.

- 1817 ஆம் ஆண்டு கார்ல் வோன் டிராய்ஸ் என்கிற ஜெர்மானியர் குதிரையில்லா வண்டியைக் கண்டுபிடித்தார். அது அவருக்கு வேகமாகச் செல்ல உதவியது. இரு சக்கரங்களால் ஆன இந்த வண்டியில் மிதிக்கக்கூடிய பெடல்கள் இல்லை. கால்களால் தரையில் உந்தித் தள்ளித்தான் சக்கரங்களை நகர்ந்த முடியும். இந்த வண்டி 'டிரைசின்' என்று அழைக்கப்பட்டது. நவீன சைக்கிள் உருவாக்கத்துக்கு இது வழிவகுத்தது.
- 1870களில் 'உயரமான சக்கரங்களைக் கொண்ட சைக்கிள்' பிரபலமானதாக இருந்தது. 'சைக்கிள்' என்கிற சொல் 1860களில் அறிமுகமாகவில்லை. பிறகுதான் இரு சக்கரங்கள் என்று பொருள் படக்கூடிய 'சைக்கிள்' என்கிற வார்த்தை பிரெஞ்சு மொழியிலிருந்து வந்தது.
- முதல் பறக்கும் விமானத்தை உருவாக்கிய ஆர்வில் ரைட், வில்பர் ரைட் சகோதரர்கள், ஆரம்பத்தில் சிறிய இருசக்கர வாகனங்கள் பழுதுபார்க்கும் கடையை நடத்திவந்தனர்.
- 25 வயது ஃபிரெட் ஏ. பிர்ச்மோர், 1935 ஆம் ஆண்டு சைக்கிள் மூலம் உலகைச் சுற்றிவந்தார். ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா என 40,000 மைல்களைக் கடந்தார். இதில் சுமார் 25,000 மைல்களை சைக்கிள் மூலம் கடந்தார். மீதி தொலைவைப் படகில் கடந்தார்.
- 1800களின் பிற்பகுதியில் சீனாவுக்கு சைக்கிள் கொண்டுவரப்பட்டது. இன்று 50 கோடி சைக்கிள்கள் சீனாவில் பயன்படுத்தப்படுகின்றன.
- நெதர்லாந்தில் 30 சதவீதப் பயணங்கள் சைக்கிள் மூலமே நடைபெறுகின்றன. 15 வயதுக்கு மேற்பட்ட 8 டச்சு மக்களில் 7 பேர் சைக்கிள் வைத்திருக்கிறார்கள்.
- உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 10 கோடி சைக்கிள்கள் தயாரிக்கப்படுகின்றன.
- கடந்த 30 ஆண்டுகளில் சைக்கிள் மூலம் பொருள்களைக் கொண்டு சேர்ப்பது முக்கியமான தொழிலாக வளர்ந்துள்ளது.
- டூர் டி பிரான்ஸ் உலகின் மிகவும் பிரபலமான சைக்கிள் பந்தயங்களில் ஒன்று. 1903 இல் நிறுவப்பட்டது. இது சகிப்புத்தன்மையைப் பரிசோதிக்கும் விளையாட்டாகக் கருதப்படுகிறது.
- சைக்கிள் மோட்டோ கிராஸ் (BMX) எனும் சைக்கிள் போட்டி, 2008 பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டியில் சேர்க்கப்பட்டது.

# Waterfall Residencies Malabe சொகுசான வாழ்க்கைக்கு வரவேற்கிறது

மாலபே பகுதியின் செழுமையான சூழலில் அமைந்துள்ள *Prime Group* இன் புதிய செயற்திட்டமான *'Waterfall Residencies,'*குடும்பத்தாரை சொகுசான வாழ்க்கைக்கு வரவேற்றுள்ளது.

*Prime Group, Waterfall Residencies* இல் விருது வென்ற மற்றும் பரந்த விலாக்களை உள்ளடக்கியுள்ளதுடன், இயற்கைக்கு நட்பான, இரம்மியமான வதிவிடத் தொகுதியாக, மாலபே, சந்திரிகா குமாரதுங்க மாவத்தையை அண்மித்து அமைந்துள்ளது.

5 ஏக்கர் காணியில் அமைந்துள்ள *Waterfall Residencies*இல், இரண்டு அடுக்கு இடவசதிகளைக் கொண்ட வீட்டு அலகுகள் காணப்படுவதுடன், அவை மூன்று படுக்கை அறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளன. இவை வதிவோருக்கு கொழும்பு நகர சௌகரியமான பரந்த ஓய்வான அனுபவத்தை வழங்குவதாக அமைந்துள்ளது. *Waterfall Residencies* எனும் பெயருக்கமையவே, 100 அடி நீர்வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டு, கிறிஸ்டல் குளம் போன்றதொரு அமைப்பை வழங்கி, அதன் அடிப்படையில் பெயரூட்டப்பட்டுள்ளது. கட்டடக் கலை மற்றும் நிலைபேறான உள்ளம்சங்களுடன், *Waterfall Residencies*இனால் சொகுசான வாழ்க்கைக்கு புதிய அடையாளம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், சிறந்த குடும்ப இல்லமாகவும் அமைந்துள்ளது.

*Prime Group*தவிசாளர் பிரேமலால் பிராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், "*Waterfall Residencies* ஐ கையளித்துள்ளதனூடாக, கனவு நனவாகியதை நாம் கொண்டாடுவதுடன், இந்த சிறந்த விலாக்களின் புதிய உரிமையாளர்களுக்கு மனமார்ந்த நல்வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றோம். உங்கள் இல்லத்துக்கு அரவணைப்பை வழங்குவது என்பது அதன் கட்டமைப்புக்கு அப்பால் நீடிப்பதாக அமைந்துள்ளது - எமது சூழலை பாதுகாத்து, ஆதரவான சமூகத்தை கட்டியெழுப்புவது என்பதாகும். எமது முயற்சிகள் கைகூடும் வேளையில், தேசத்தின் முன்னேற்றத்தில் பங்களிப்பு வழங்குவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வாழக்கூடிய, விரும்பத்தக்க சமூகங்களை உருவாக்குவதில் தொடர்ச்சியான மேம்படுத்துவதில் எமது ஈடுபாட்டுக்கான உறுதி மொழியை நாம் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றோம்." என்றார்.

*Waterfall Residences* இலுள்ள இல்லங்களுக்கான சாவிகளை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட குடும்பங்கள் பூரிப்படைந்திருந்தன. அவர்களுக்கு தற்போது இயற்கையை நேசிக்கும் வாழிடம் மற்றும் சிறந்த வாழ்க்கை முறை போன்றவற்றுடன் புதிய நினைவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

*Waterfall Residencies* இல் இல்லமொன்றின் உரிமையாளரான சட்டத்தரணியான அனுராத குணவர்தன குறிப்பிடுகையில், "28 வருடங்களுக்கு மேலாக ரியல் எஸ்டேட் சந்தையில் பேணி வரும் கீர்த்தி நாமத்துக்காக நான் *Prime Lands* ஐ தெரிவு செய்திருந்தேன். ஆரம்பத்தில் ஒரு இல்லமாக அமைந்திருக்கும் எனக் கருதிய போதிலும், தற்போது சொர்க்கம் போலுள்ளது. வாடிக்கையாளர் தன்னிறைவில் *Prime*காண்பிக்கும் அர்ப்பணிப்பு, இன்றைய கையளிப்பு வைபவம் வரையில் முதல் நாளிலிருந்து அவதானிக்க முடிந்தது. ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் முக்கியத்துவமளித்து நடத்துகின்றனர். இந்தத் திட்டத்துடன், சந்தை முன்னோடித்தன்மையை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர். நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அழகிய, சூழலுக்கு நட்பான கொள்கைக்கு எம்மை அறிமுகம் செய்தமைக்காக *Prime Group* க்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்." என்றார்.



*Waterfall Residencies* இனால் குடும்பத்தார் உயர் பாதுகாப்பு மற்றும் பிரத்தியேகத்தன்மையை அனுபவிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இயற்கையுடன் இணைந்த ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. *Waterfall Residencies* இனால், நகர வாழ்க்கையின் சௌகரியத்தை கையளிக்கும் நவீன அம்சங்களை வெளிப்படுத்துவதை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

மற்றுமொரு இல்லத்தின் உரிமையாளரான எம். ஜே. டபிள்யு. சில்வா குறிப்பிடுகையில், "மாலபே *Waterfall Residencies* இன் கையளிப்பு வைபவத்தில் பங்கேற்றுள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். வாடிக்கையாளர் தன்னிறைவுக்கான தனது அர்ப்பணிப்பை *Prime Group* வெளிப்படுத்தியுள்ளது. இலாபகரத்தன்மை, முன்னுரிமையளித்தல் போன்றவற்றுக்கு அப்பால் சென்று, தவிசாளரின் அர்ப்பணிப்பினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதனூடாக வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் சேவையை பெற்றுக் கொடுக்க முடிகின்றது. *Prime Group* இன் பிரத்தியேகமான சேவை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான அசல் பராமரிப்பு போன்றவற்றினூடாக தொழிற்துறையில் அவர்களை வேறுபடுத்தியுள்ளது. என்னைப் போன்ற வீட்டு உரிமையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதில் தூர நோக்குடைய தலைமைத்துவத்தை வழங்கும் தவிசாளருக்கு நன்றியை தெரிவிக்கின்றேன்." என்றார்.

# வர்த்தக திணைக்களத்தை இணையவழி கொடுப்பனவுகளுக்காக இணைப்பு

வர்த்தக திணைக்களத்தை 'கொம்பேங்க் டிஜிட்டல்' உடன் இணைத்து லங்கா பே சேவைகள் ஊடாக இணைய வழி கொடுப்பனவுகளுக்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

இதன் விளைவாக வர்த்தகங்கள் அல்லது தனிநபர்கள் ஏற்றுமதியாளர்களுக்கான பதிவுக் கட்டணம், அசல் சான்றிதழ்களை வழங்குவதற்கான கட்டணம் என்பன உட்பட வர்த்தக திணைக்களத்தின் ஏனைய சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கான கட்டணங்களை பாதுகாப்பான இணைய வழி கொடுப்பனவுகள் மூலம் செய்து கொள்ள முடியும்.

கடதாசி பாவனைகள் அற்ற இந்த செயற்பாடுகள் காரணமாக வாடிக்கையாளர் ஒருவர் வங்கிக் கிளையொன்றுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்ற தேவையும் இல்லை. மேலும் இது வங்கியின் நிலைத்தன்மை செயற்பாடுகளுக்கும் பங்களிப்புச் செய்கின்றது. வாடிக்கையாளர்கள் சுற்றாடலுக்கு சிநேகபூர்வமானவர்களாக செயற்படவும் இது வழியமைக்கின்றது என வங்கி அறிவித்துள்ளது.

வங்கியின் டிஜிட்டல் வங்கிப் பிரிவின் துணை பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ குறிப்பிடுகையில், 'கொம்பேங்க் டிஜிட்டல் மேடையில் வர்த்தக திணைக்களமும் இணைக்கப்பட்டுள்ளதன் மூலம் எமது தர மேம்படுத்தல்கள் மற்றும் பண்புகளின் படிக்கட்டுகளில் நாம் ஒரு படி மேலே சென்றுள்ளோம். இவை எமது சில்லறை வாடிக்கையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள், கூட்டாண்மை வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு இடையூரற்ற தனியார் மயப்படுத்தப்பட்ட வங்கிச் சேவை அனுபவங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன' என்றார். 'இந்த மேடையில் ஏற்கனவே பத்து இலட்சத்துக்கும் அதிகமான பாவனையாளர்கள் இருக்கின்ற நிலையில், இந்த தர மேம்படுத்தலானது உறுதியான பங்களிப்பை, வசதிகளில் மட்டுமன்றி நாம் வாழும் கிரகத்துக்கு சார்பான செயற்பாடுகளில் வாடிக்கையாளர்களை ஊக்குவிப்பதாகவும் அமையும்' என்று அவர் மேலும் கூறினார்.

கொம்பேங்க் டிஜிட்டல் இணைய மேடை மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் (IECD), உள்நாட்டு இறைவரி திணைக்களம் (IRD), சரக்கு, கப்பல் மற்றும் நுழைவுக் கட்ணங்களுக்காக இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA), இலங்கை சுங்கத் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF), இலங்கை முதலீட்டு சபை (BOI), இலங்கை தரப்படுத்தல் நிறுவனம் (SLSI) ஆகிய அரச திணைக்களங்கள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. LankaPay இணைய வழி (LPPOP) மேடை மூலம் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



தென்கொரியா

### தென்கொரியாவுக்கு

# மீண்டும் குப்பை பலூன்



வடகொரியா கடந்த சில நாட்களுக்கு முன் சிகரெட் துண்டுகள், வெற்று காகிதங்கள், கிழிந்த துணிகள், பிளாஸ்டிக் கழிவுகள் போன்ற குப்பைகள் அடங்கிய பலூன்களை தென்கொரியாவிற்குள் அனுப்பிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், தென்கொரியாவிற்குள் மீண்டும் குப்பை பலூனை வடகொரியா அனுப்பியுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக தென்கொரியாவிற்குள் 600க்கும் மேற்பட்ட குப்பை பலூன்களை வடகொரியா அனுப்பியுள்ள நிலையில், வடகொரியாவிற்கு எதிரான வாசகங்களுடன் தென்கொரியாவில் இருந்து வீசப்பட்ட காகிதங்களுக்கு பதிலடியாக இந்த பலூன்கள் வீசப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தால் கொரிய தீபகற்பத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கனடா

### கனடாவை உலுக்கிய கொலை சம்பவத்தில்

# சந்தேக நபர் சிறையில் அடித்துகொலை



கனடாவில் உள்ள வான்கூவர் நகரில் கடந்த 1990-2000 கால கட்டத்தில் தொடர்ச்சியாக இளம்பெண்கள் பலர் கொல்லப்பட்டனர். இது தொடர்பில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் போர்ட் கோக்விட்லாம் பகுதியில் பன்றி பண்ணை நடத்திய ரொபர்ட் பிக்டன் (வயது 71) சட்ட விரோதமாக ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்ததாக பொலிஸுக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டன.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சென்றபோது அவரது வீட்டில் உள்ள குளிர்சாதனப் பெட்டியில் ஒரு பெண்ணின் உடல் துண்டு, துண்டாக வெட்டி வைக்கப்பட்டிருந்ததையடுத்து, பொலிஸார் அவரை கைது செய்து விசாரணை நடத்தினர்.

அப்போது 49 பெண்களை அவர் வெட்டிக் கொன்றதும், பின்னர் அவர்களது உடலை துண்டு, துண்டாக வெட்டி தனது பண்ணையில் உள்ள பன்றிகளுக்கு இரையாக போட்டதும் தெரிய வந்துள்ளதுடன், இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது.

இதுதொடர்பான வழக்கில் கடந்த 2006ஆம் ஆண்டு நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கிய நிலையில் வான்கூவரில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் ரொபர்ட்டுக்கும், சிறையில் உள்ள சக கைதிகளுக்கும் இடையே கடந்த மாதம் 19ஆம் திகதி மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கைதிகள் பலர் அவரை சரமாரியாக தாக்கினர்.

இதனையடுத்து அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஜேர்மனி

# பேரணியில் கத்திக் குத்து தாக்குதல்



ஜேர்மனியில் பொதுமக்கள் மீது ஒருவர் கத்தியால் குத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஜேர்மனியின் தென்மேற்கில் அமைந்துள்ள மன்ஹெய்ம் நகரின் மையப்பகுதியில் மார்க்பிளாட்ஸ் சதுக்கத்தில் கடந்த முதலாம் திகதி காலை 11.30 மணியளவில் வலதுசாரி அமைப்புகளின் பேரணி ஒன்று நடைபெற்றது. இது இஸ்லாமிய எதிர்ப்பு பரப்புரை செய்ததாக கூறப்படுகிறது. பேரணி நடத்திய அமைப்பு அத்தகைய சிந்தனை கொண்டது.

இந்நிலையில், பேரணியில் ஈடுபட்டவர்கள் மீது நபர் ஒருவர், திடீரென கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தத் தொடங்கினார். இதனால் அங்கிருந்த மக்கள் அலறிடித்துக் கொண்டு ஓடினர். மறுபுறம், பொது மக்கள் அவரை தடுக்க முயற்சி செய்தபோதும் அவர் தொடர்ந்து தாக்கியுள்ளார். இதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் அந்த நபரை துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர். இந்த தாக்குதல் சம்பவத்தில் ஏராளமானோர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தாக்குதலுக்கான நோக்கம் தெளிவாக தெரியவில்லை என்றும், பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும் அதிகாரிகள் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருப்பதி

### பவன் கல்யாண் வெற்றி பெற

# முழங்காலில் படியேறிய ரசிகை



நடிகர் சிரஞ்சீவியின் சகோதரரும், ஜனசேனா கட்சியின் தலைவரும் நடிகருமான பவன்கல்யாண், இம்முறை தெலுங்கு தேசம், பாஜகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்துள்ளார்.

கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிட்டாபுரம் சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிட்டுள்ள அவர், கடந்த 2019இல் போட்டியிட்ட 2 தொகுதிகளிலும் தோல்வியை சந்தித்தார். ஆதலால், இம்முறை இவர் கண்டிப்பாக வெற்றி பெற வேண்டுமென இவரது ரசிகர்கள் பலர், பலவிதமாக நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர்.

இதில், கிழக்கு கோதாவரி மாவட்டம், உண்ட்ரவாராம் எனும் ஊரை சேர்ந்த ஆர்.எம்.பி பெண் மருத்துவரான துர்கா இராமலட்சுமி என்பவர் கடந்த 31ஆம் திகதி, திருப்பதி அலிபிரி மலைப்பாதையில் முழங்காலால் படியேறி திருமலைக்கு சென்று நேர்த்திக்கடன் செலுத்தினார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'எனக்கு கட்சி பேதமில்லை. நான் ஒரு பவன் கல்யாணின் தீவிர ரசிகை. ஆதலால் அவர் இம்முறை கண்டிப்பாக வெற்றி பெற்று சட்ட சபையின் படியேற வேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை. ஆதலால், எல்லாம் வல்ல ஏழுமலையானை வேண்டிக்கொள்ளவே நான் முழங்காலில் படியேறி வந்தேன். எனது கோரிக்கையை பெருமாள் ஏற்றுகொள்வார் என எதிர்பார்க்கிறேன்' என்று கூறினார்.

கேங்டாக்

### மீண்டும் சிக்கிமில் எஸ்.கே.எம்.

# அருணாச்சலத்தில் பா.ஜ.க

சிக்கிம் சட்டப்பேரவை தேர்தலில் ஆளும் எஸ்.கே.எம். கட்சி 31 இடங்களில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. 2019இல் நடந்த சிக்கிம் சட்டப்பேரவை தேர்தலில் எஸ்.கே.எம். கட்சி 17 இடங்களை கைப்பற்றி ஆட்சியை பிடித்திருந்த நிலையில், இந்த முறை 32 இடங்களில் 31 இடங்களை வென்று அபார வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்துள்ளது.

அதேசமயம், அருணாச்சல் பிரதேசத்தில் அருதிப் பெரும்பான்மையுடன் பாஜக ஆட்சி அமைக்கிறது. மேலும், அருணாச்சலப் பிரதேசத்தில் பாஜக வேட்பாளர்கள் பத்து பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், பாஜக மீண்டும் ஆட்சி அமைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், ஒருவர் மாநில முதல்வர் பெமா காண்டு. தவாங் மாவட்டத்தில் உள்ள முக்டோவில் இருந்து அவர் எம்.எல்.ஏ வாக தேர்வாகி இருக்கிறார். இந்த தொகுதியில் இதுவரை அவர் 4 முறை வெற்றி பெற்றுள்ளார். இதில், மூன்று முறை அவர் போட்டியின்றி தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

### சம்பியன்ஸ் லீக்:

# சம்பியனானது றியல் மட்ரிட்




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் சம்பியனானது.

வெம்ப்ளியில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்ற ஜேர்மனிய புண்டெஸ்லிகா கழகமான பொரூசியா டொட்டமுண்டுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே மட்ரிட் 15ஆவது தடவையாக சம்பியனானது.

மட்ரிட் சார்பாக டனி கர்வகால், வின்ஷியஸ் ஜூனியர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

### அனைத்து வகையிலான கிரிக்கெட்டிலிருந்தும்

# ஓய்வு பெற்ற தினேஷ் கார்த்திக்



அனைத்து வகையிலான கிரிக்கெட்டிலிருந்தும் இந்தியாவின் தினேஷ் கார்த்திக் ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த 2004ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 39 வயதான கார்த்திக், 94 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 1,752 ஓட்டங்களைப் பெற்றதோடு, 60 இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் 100 பந்துகளில் 142.61 ஓட்டங்கள் என்ற சராசரியில் 686 ஓட்டங்களையும், 26 டெஸ்ட் போட்டிகளில் 1,025 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.



# ஷொரிஃபுல் விளையாடுவது சந்தேகம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், பங்களாதேஷின் ஆரம்பப் போட்டியான இலங்கைக்கெதிரான போட்டியில் அதன் வேகப்பந்து வீச்சாளர் ஷொரிஃபுல் இஸ்லாம் விளையாடுவது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது.

இந்தியாவுக்கெதிரான போட்டியின்போது பந்து கையைத் தாக்கியதில் ஷொரிஃபுல்லி இடதுகையின் சுட்டு விரலுக்கும், நடு விரலுக்குமிடையிலான பகுதியில் கிழிவு ஏற்பட்டு ஆறு தையல்கள் போடப்பட்டுள்ளன.

அந்தவகையில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (07) நடைபெறவுள்ள குறித்த போட்டியில் ஷொரிஃபுல் விளையாடுவது குறித்து அறிந்து கொள்ள இரண்டு நாள்கள் பங்களாதேஷ் காத்திருக்க வேண்டியுள்ளது.



### பயிற்சிப் போட்டியில்

# பங்களாதேஷை வென்ற இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் சனிக்கிழமை (01) நடைபெற்ற பங்களாதேஷுடனான போட்டியில் இந்தியா வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, றிஷப் பண்டின் 53 (32), ஹர்திக் பாண்டியாவின் ஆட்டமிழக்காத 40 (23) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மஹெடி ஹஸன் 4-0-22-1, ஷொரிஃபுல் இஸ்லாம் 3.5-0-26-1, மகமதுல்லா 2-0-16-1, தன்ஸிம் ஹஸம் சகிப் 1.1-0-6-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 183 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், அர்ஷ்தீப் சிங் (2), மொஹமட் சிராஜ், அக்ஸர் பட்டேல், பாண்டியா, ஜஸ்பிரிட் பும்ரா, ஷிவம் டுபேயிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 122 ஓட்டங்களையே பெற்று 60 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் மகமதுல்லா 40 (28) ஓட்டங்களைப் பெற்றனர்.



### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# கனடாவை வீழ்த்திய ஐ. அமெரிக்கா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் டலாஸில் ஞாயிற்றுக்கிழமை (02) காலை நடைபெற்ற கனடாவுடனான குழு ஏ போட்டியில் ஐக்கிய அமெரிக்கா வென்றது. ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆரோன் ஜோன்ஸ்

கனடா: 194/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நவ்னீட் தலிவால் 61 (44), நிகொலஸ் கிர்டன் 51 (31), ஷ்ரேயாஸ் மொவ்வா ஆ.இ 32 (16), ஆரோன் ஜோன்சன் 23 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்மீட் சிங் 1/27 [4], சௌரப்ஹ் நெற்றவல்கர் 0/16 [2], ஜஸ்டீப் சிங் 0/24 [3])

ஐ. அமெரிக்கா: 197/3 (17.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஆரோன் ஜோன்ஸ் ஆ.இ 94 (40), அன்ட்றீஸ் கௌஸ் 65 (46) ஓட்டங்கள். பந்துவீச்சு: 1/19 [3])

போட்டியின் நாயகன்: ஆரோன் ஜோன்ஸ்

இந்நிலையில் நியூ யோர்க்கில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு டி போட்டியில் தென்னாபிரிக்காவை இலங்கை எதிர்கொள்ளவுள்ளதுடன் நாளை காலை 6 கயானாவில் நடைபெறவுள்ள குழு சி போட்டியில் உகண்டாவை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 03 , ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.